| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | **புதுக்கோட்டை** | காலம் : | **03/04/2024** | முதல் | **07/04/2024** |
| | அறிக்கை எண் : | **027/ 2024** | வெளியீட்டு நாள் : | | **02/04/2024** | |

## புதுக்கோட்டை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| **கடந்தவார வானிலை (28.03.2024 முதல் 01.04.2024)** | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 07-04-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28/03 | 29/03 | 30/03 | 31/03 | 01/04 | **தேதி** | **நாள்-1** 0304 | **நாள்-2** 04/04 | **நாள்-3** 05/04 | **நாள்-4** 06/04 | **நாள்-5** 07/04 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.1 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 38 | 39 | 39 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 39 | 39 | 40 | 39 | 39 |
| 26 | 27 | 25 | 26 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 26 | 26 | 26 | 26 |
| 6 | 5 | 5 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 0 | 1 | 2 | 2 |
| 71 | 78 | 75 | 75 | 76 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 80 | 80 | 70 |
| 40 | 33 | 28 | 35 | 41 | | 20 | 20 | 20 | 20 | 20 |
| 12 | 9 | 9 | 8 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 14 | 16 | 16 | 16 |
| கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 39°-40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 26°-27°செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 14 முதல் 16 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**கால்நடை வளர்ப்பு :**

3 ஏப்ரல் முதல் 7 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது 2- 3° செல்சியஸ் செல்சியஸ் அதிகரித்து காணப்படும். 34° செல்சியஸ் முதல் 37° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம் :**

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு (03.04.2024 to 07.04.2024) அதிகபட்ச வெப்பநிலை அதிகரித்து காணப்படும். இதன் காரணமாக சில இடங்களில் வெப்பஅலை வீசக்கூடும். எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 14 முதல் 16 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மரவள்ளி, கத்திரி, கால்நடை.**

**மரவள்ளி**:

மரவள்ளியில் நுண்ணூட்டசத்து பற்றாக்குறை ஏற்பட்டு இலைகள் வெளிறிய மஞ்சள் நிறத்தில் காணப்படுகிறது.

இவற்றை நிவர்த்தி செய்ய மரவள்ளி ஸ்பெஷல் என்ற நுண்ணூட்ட திரவத்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி என்ற விகிதத்தில் கலந்து செடியின் மீது நன்கு படும்படி காலை அல்லது மாலை நேரங்களில் தெளிக்க வேண்டும்.

**கத்திரி**:

தோட்டக்கலை பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைத் தத்துப்பூச்சி, இலைபேன், வெள்ளை ஈக்கள் மற்றும் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

எனவே விவசாயிகள் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்க ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் வண்ண ஒட்டும் பொறிகள் வைத்து கட்டுப்படுத்தலாம்.

தாக்குதல் அதிகம் காணப்படும் நேரங்களில் 1 லிட்டர் தண்ணீரில் 50 கிராம் வேப்பங் கொட்டை கரைசல் அல்லது 30 மில்லி வேப்ப எண்ணெய் இவற்றில் ஏதாவது ஒன்றை கலந்து தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

தற்போது நிலவும் வெப்பமான வானிலையின் காரணமாக கோழிகள் தீவனம் எடுப்பது குறைவாக இருப்பதால் அத்தியாவசிய அமினோ அமிலங்கள் மற்றும் தாது உப்புகள் போன்ற நுண்ணூட்டச் சத்துக்களின் அளவை அதிகரித்துக் கொடுக்க வேண்டும்.

மேலும், கோடையில் முட்டை ஓடுகள் மிகவும் மெலிந்து இருக்கும். இதைத் தவிர்க்க அதிக அளவு கிளிஞ்சலைத் தட்டுகளில் வைத்து முட்டைக் கோழிகளுக்கு எப்போதும் கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

வழக்கத்தை விட கோடையில் தண்ணீர்த் தொட்டிகளின் எண்ணிக்கையை 20 முதல் 30 சதவிகிதம் அதிகரிப்பது நல்லது. அதனால் எல்லாக் கோழிகளும் தேவையான பொழுது ஒரே சமயத்தில் நீரைப் பருக வாய்ப்பு ஏற்படுகின்றது.

தண்ணீர் விரைவில் சூடாவதை தடுக்கப் பனிக்கட்டிகளைப் போட்டு நீரை, குளிர்விக்கலாம். கோடையில் கோழிகளுக்கு ஏற்படும் அயர்ச்சியைத் தடுக்க தண்ணீரில் தாதுக்களை சிறிது கூடுதலாக சேர்த்துக் கொடுக்க வேண்டும்.